**வேலூர் மாவட்டம், அனைத்து வகை தொடக்க/நடுநிலை/உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி (அரசு/நிதியுதவி/தனியார் மெட்ரிக்/சி.பி.எஸ்.சி/ ஐ.சி.எஸ்.சி மற்றும் ஆதிதிராவிட நல பள்ளிகள்) தலைமை ஆசிரியர்கள், முதல்வர்கள் கவனத்திற்கு,**

நமது தமிழ்நாடு அரசு கல்வித்துறை சார்பில் பெற்றோரைக் கொண்டாடுவோம் எனும் சிறப்பு திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தின் சார்பில் மலர் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து வகை பள்ளிகளிலிருந்தும் இம்மலரில் இடம்பெற வேண்டிய கருத்துகள் (**தமிழ் அல்லது ஆங்கில வடிவில்**) ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. இம்மலரில் தங்கள் சிறப்பான கருத்துகள் இடம் பெறும் வகையில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு கட்டுரைகளாகவோ (இரு பக்கங்களுக்கு மிகாமல்), கவிதைகளாகவோ (200 வார்த்தைகளுக்கு மிகாமல்), வரலாற்றுச் சான்றுகளாகவோ (ஒரு பக்கம்) இருக்கலாம். தங்கள் கருத்துகள் யுனிகோடு எழுத்துருவில் (Unicode-manjan) தட்டச்சு செய்யப்பட்டு, தாமதமின்றி **09.01.2025 வெள்ளிக்கிழமை மாலைக்குள்** கிடைக்கப்பெறும் வகையில் **malarvelloredist@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

1. வேலூர் மாவட்டத்தின் சிறப்புகள்,
2. வேலூர் மாவட்டத்தின் வரலாறு,
3. கடந்த ஆண்டுகளில் 7.5% தேர்வான மாணவர்கள் பட்டியல்,
4. மாவட்ட அளவில் PTA/SMC அமைப்பின் சிறந்த செயல்பாடுகள்,
5. கடந்த ஆண்டுகளில் காமராசர் விருது பெற்ற பள்ளிகள் விவரம் மற்றும் செயல்பாடுகள்,
6. மன்ற செயல்பாடுகளில் மாவட்ட / மாநில அளவில் சிறந்து விளங்கிய மாணவர்கள்,
7. வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயின்று, உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் குறிப்புகள்,
8. கடந்த 3 ஆண்டுகளில் NMMS/TRUST/NTSE/CM Scholarship/NILP/NAS மற்றும் சிறப்புத் தேர்வுகளில் மாநில அளவில் சிறந்து விளங்கிய மாணவர்கள் பட்டியல்,
9. கடந்த 3 ஆண்டுகளில் கல்வி இணை செயல்பாடுகளில் மாநில அளவில் சிறந்து விளங்கிய மாணவர்கள் பெற்ற பெற்ற விருதுகள்,
10. கடந்த 3 ஆண்டுகளில் கல்வி சாரா செயல்பாடுகளில் மாநில அளவில் சிறந்து விளங்கிய மாணவர்கள் பெற்ற பெற்ற விருதுகள்,
11. கடந்த 3 ஆண்டுகளில் விளையாட்டுப் போட்டிகளில் மாநில அளவில் சிறந்து விளங்கிய மாணவர்கள் பெற்ற பெற்ற விருதுகள்,
12. கடந்த 3 ஆண்டுகளில் கலைத்திருவிழாவில் மாநில அளவில் சிறந்து விளங்கிய மாணவர்கள் பெற்ற பெற்ற விருதுகள்,
13. கடந்த 3 ஆண்டுகளில் மாநில விருது / தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள் விவரம்,

14. கடந்த 3 ஆண்டுகளில் பள்ளிகளில் அதிக மாணவர் சேர்க்கைக்காக மாநில விருது / தேசிய விருது பெற்ற பள்ளிகள் விவரம்,
15. ஆசிரியர்கள்/ மாணவர்கள்/ பெற்றோர்கள் ஆகியோரது படைப்புகள் (கட்டுரைகள், கவிதைகள், கண்டுபிடிப்புகள்)
16. கல்வி மற்றும் விளையாட்டு போன்றவற்றில் மாணவர்கள்/ ஆசிரியர்கள் வெளிநாடுகளில் பங்கேற்ற விவரம்,
17. கல்விச் செயல்பாடுகளில் வெளிநாடுகளுக்குச் சென்று பங்கேற்ற மாணவர்கள் விவரம்,
18. கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு பொதுத் தேர்வில் தொடர்ந்து 100% தேர்ச்சி விழுக்காடு பெற்ற பள்ளிகள் விவரம் மற்றும் தேர்ச்சி சதவீதம் தொடர்ந்து உயர்த்திய பள்ளிகள் விவரம்,
19. நமது வேலூர் மாவட்டத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் பார்வையிட்ட பள்ளிகளின் சிறப்பம்சங்கள்,
20. வேலூர் மாவட்டத்தில் 2025 அரசு பொதுத் தேர்வில் தேர்ச்சி சதவீதம் உயர்த்த மாவட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்,
21. தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்டமான நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி திட்டத்தில் (NSNOP) பள்ளிகளில் செயல்படுத்தப்பட்ட செயல்பாடுகள் விவரம்,
22. நமது வேலூர் மாவட்டத்தில் விளையாட்டு மற்றும் பிற கலைத் துறைகளில் மாவட்ட/மாநில/தேசிய/சர்வதேச அளவில் பங்கேற்ற/ வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்,
23. புதியதாகத் தொடங்கியுள்ள KVS பள்ளி பற்றிய விவரம்,
24. கடந்த மூன்று ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் செயல்படும் மாதிரி பள்ளியின் செயல்பாடுகள்,
25. சுதந்திரம் பெற்ற பின் நமது இந்தியத்திரு நாட்டின் தலைநகர் புதுதில்லியில் முதன்முதலில் ஏற்றப்பட்ட தேசியக்கொடி தயாரித்த நமது மாவட்டத்தின் சிறப்பு,
26. வேலூர் மாவட்டத்தில் காணப்படும் சிறப்புத் தொழில்கள் பற்றிய செய்திகள்,
27. நமது வேலூர் மாவட்டத்தில் கல்வித் துறையில் மட்டுமின்றி, பிற துறைகளில் பணியாற்றி விருதுகள் பெற்றோர் விவரம் மற்றும் குறிப்புகள்,
28. நமது வேலூர் மாவட்டத்தில் நூற்றாண்டு விழா மற்றும் 100 ஆண்டுகளுக்கு மேல் விழா காணும் பள்ளிகள் குறித்த விவரம்,

**குறிப்பு:** குறித்த நேரத்திற்குள் வந்து சேரும் கவிதைகள், கட்டுரைகள், சான்றுகளிலிருந்து மலர்க் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு மலரில் வெளியிடப்படும். அனுப்பப்படும் கருத்துகளில் உரிய திருத்தங்கள் செய்ய குழு உறுப்பினர்களுக்கு முழு உரிமை உண்டு.

**முதன்மைக்கல்வி அலுவலர்,**
**வேலூர் மாவட்டம்.**